வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 675/2020
வழக்குசாட்சி LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோகரன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | பொன்னுசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 70 |

தேதி 28.01.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூர் MMDA வில் வசித்து வருகிறேன். 5 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டை பூட்டிவிட்டு கடலூர் கல்யாணத்திற்கு சென்று இருந்தோம். 2 நாள்கள் கழித்து வந்தபோது பக்கத்துவீட்டிக்காரர் எங்களது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததாகவும், அவராக பூட்டு போட்டு வைத்திருந்தார். உள்ளே சென்று பார்த்த போது பொருட்கள் அனைத்தும் கலைந்துக்கிடந்தது. பீரோவில் இருந்த 2 கால் சவரன் மோதிரம் காணாமல் போயிருந்தது. காவல் நிலையம் சென்று நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1 ஆக்குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள். 3 மாதங்களுக்கு முன்பு தான் மனு செய்து என்னுடைய மோதிரத்தினை நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டேன். யார் திருடினார்கள் என்று எனக்குத் தெரியாது.

**குறுக்கு விசாரணை**

மோதிரம் அடையாளத்தினை குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம். மோதிரம் ரசீதினை போலீசாரிடம் அளிக்கவில்லை என்றால் ஆமாம். நான் புகாரில் மோதிரம் மட்டும் தான் காணோம் என அளித்தேனா என்றால் ஆமாம். ஒரு டேப் பழையதும் காணவில்லை டேப் என்னுடையது என்பதற்கு ஆவணங்கள் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். டேபில் சிம்கார்டு உபயோகப்படுத்தினோமா என்றால் இல்லை. சம்பவத்தினைக் குறித்து நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான் வருவதற்கு முன்பே போலீசார் வந்து சென்றுவிட்டார்கள் என்றால் ஆமாம். எனது நகை உண்மையாக திருடுப் போயிருந்தால் உடனடியாக மனு செய்து பெற்றிருப்பேன் என்றாலும் என்னுடையது அல்ல என்பதால் தான் உடனடியாக பெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.